செ. கு. எண்:097 நாள்: 06.07.2017

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்

அறிக்கை – 6.7.2017

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், பாகூர் உள்வட்டம்-பர்கூர் ஆ கிராமம், மேல்தெருவைச் சேர்ந்த திரு. முருகன் என்பவரின் மனைவி திருமதி வெங்கிட்டி (எ) வெங்கிட்டம்மாள் என்பவர் 27.6.2017 அன்று பர்கூர் தொள்ளி செல்லும் வனப்பகுதியில் விறகு எடுக்கச் சென்ற போது, எதிர்பாராதவிதமாக காட்டுயானை தாக்கியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், மேலூர்–3 கிராமம், கொலக்கம்பையைச் சேர்ந்த திரு. மாணிக்கம் என்பவரின் மகன் திரு. ராதாகிருஷ்ணன் என்பவர் 1.7.2017 அன்று நியாய விலைக் கடையில் பொருட்கள் வாங்க சென்ற போது, காட்டெருமை தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

வன விலங்குகள் தாக்கியதில் உயிரிழந்த திருமதி வெங்கிட்டி (எ) வெங்கிட்டம்மாள் மற்றும் திரு ராதாகிருஷ்ணன் ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவத்தில் உயிரிழந்த வெங்கிட்டி (எ) வெங்கிட்டம்மாள் மற்றும் ராதாகிருஷ்ணன் ஆகியோரின் குடும்பத்திற்கு தலா நான்கு லட்சம் ரூபாய் வனத் துறை மூலம் உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9